ஆனைக்கோட்டை - உயரப்புலம்

# அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயம்



# திருப்பணி மலரும் செயற்பாட்டு அறிக்கையும்

## திருப்பணிச் சபை, பரிபாலன சபை


30-09-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



# தேரிலிருந்து இறங்கி பவனிவரும் பஞ்சமுக விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்கோட்டை - உயரப்புலம்

# அருள்மிகு
# ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயம்

# திருப்பணி மலரும்
# செயற்பாட்டு அறிக்கையும்

திருப்பணிச் சபை - பரிபாலன சபை

30-09-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிபாலன சபை**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. இ. அருணகிரி |
| உப தலைவர் | : | திரு. இ. கு. ரவீந்திரா |
| செயலாளர் | : | திரு. அ. கணேசமூர்த்தி |
| உப செயலாளர் | : | திரு. ஆ. சி. கணேசவேல் J.P. |
| பொருளாளர் | : | திரு. க. ஜெயபாலன் |

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

திரு. நா. குணபாலசிங்கம்

திரு. சி. குமாரசாமி

திரு. வி. பாலச்சந்திரன்

திரு. அ. தங்கலிங்கம்

**திருப்பணிச் சபை**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. இ. அருணகிரி |
| செயலாளர் | : | திரு. அ. கணேசமூர்த்தி |
| பொருளாளர் | : | திரு. க. ஜெயபாலன் |

**திருப்பணிச் சபை உறுப்பினர்கள்**

திரு. ந. சிறிகாந்தன்

திரு. க. பாலசுப்பிரமணியம்

திரு. மா. பரமேஸ்வரன்

திரு. மா. சசிகரன்

திரு. சு. சிவகுமார்

திரு. ஆ. வ. கணேசலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முகவுரை | v |
| கலாநிதி ஆறு திருமுருகன் வாழ்த்துச் செய்தி | viii |
| பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் வாழ்த்துச் செய்தி | ix |
| சிவஸ்ரீ க. குகதாசக்குருக்கள் வாழ்த்துச் செய்தி | x |
| ஆ. சி. கணேசவேல் வாழ்த்துச் செய்தி | xi |
| தலைவரின் ஆரம்ப செயற்பாடுகளும் திருப்பணிகளை ஆவணப்படுத்துதலும் ஆண்டறிக்கையும் | 01 - 07 |
| பொருளாளரின் அறிக்கை | 08 - 09 |
| திருப்பணி வரவு செலவு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் | 10 - 11 |
| கணக்காய்வு செய்யப்பட்ட திருப்பணிச்சபை வரவு செலவு அறிக்கை 01.09.2009 - 30.09.2012 வரை | 12 - 28 |
| தலைவரின் நிறைவேற்று செயற்பாட்டு அறிக்கை | 29 - 36 |
| நிறைவேற்றப்பட்ட திருப்பணிகளின் நிழற்படங்களும் வெள்ளோட்ட நிகழ்வும் | பக். 36இன் பின் |
| கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் | |
| பரிபாலன சபை வரவு செலவு பொதுக் கணக்கு 2011 - 2012 வரை | 37 |
| கணக்காய்வு செய்யப்பட்ட பரிபாலன சபை பொதுக் கணக்கு 2011 - 2012 | 38 - 48 |
| சித்திரத்தேர் கட்டுமான வேலைக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல் | 49 |
| சித்திரத்தேர் அமைத்தலுக்கான ஒப்பந்தம் | 50 - 54 |
| தேர்த் தரிப்பிடம் அமைத்தலுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல் | 55 |
| தேர்த் தரிப்பிடம் அமைப்பதற்கான மதிப்பீட்டு அறிக்கை | 56 - 60 |
| செயலாளரின் நன்றி நவிலல் | 61 - 62 |
| திருப்பணி மலரும் செயற்பாட்டு அறிக்கையும் வெளியிடல் அனுசரணையாளரின் பங்களிப்பு | 63 - 65 |
| திருப்பணி மலரும் செயற்பாட்டு அறிக்கையும் அச்சிட்டு வெளியிடலும் முடிவுரையும் | 66 - 67 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இம் மலரின் உள்ளடக்கம் ஆலயங்களின் பரிபாலன சபைகள் திருப்பணிச் சபைகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆலய திருப்பணிக்காக அடியார்களிடமிருந்து பெறப்படும் நிதி ஒரு பொது நிதியாகும். இந் நிதியைக் கையாளும்போது உரிய தீர்மானங்கள் சபையால் நிறைவேற்றப்பட்டு உரிய நிதிப் பிரமாணங்கள் பின்பற்றப்பட்டு பொருத்தமான கணக்கு நடவடிக்கைகள் பேணப்படல் வேண்டும். மேலும் ஒரு பொது நிதியைக் கையாளும்போது வகை கூறவேண்டிய பொறுப்பு (Accountability) சபைக்கு உண்டு. இந் நிலையில் எமது ஆலய நிர்வாக செயற்பாடுகளில் கட்டட நிர்மாணம் வீதிப்புனரமைப்பு அரச கணக்கீட்டு துறையிலும், ஏனைய ஆலயங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்யப்பட்ட அனுபவங்கள் முதலியன என்னால் உள்வாங்கப்பட்டுள்ளமை இங்கு ஒரு சிறப்பு அம்ச மாகும். முக்கியமாக திருப்பணிக்கு நிதி வழங்கியவர்களும் மகாசபை உறுப்பினர்களும் ஏனையவர்களும் இம் மலரின் உள்ளடக்கத்தைப் பொறுமையுடன் வாசித்து அறிந்து கொள்வதன் மூலம் நிர்வாகச் செயற்பாடுகளை அறிந்து புரிந்துகொள்ள முடியும்.

இந் நிலையில் ஆனைக்கோட்டை, உயரப்புலம் அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயத்திற் சமகாலப்பகுதியிற் பாரிய திருப்பணிகள் மிகவும் திருப்திகரமாக நிறைவேற்றுவதற்கு விநாயகப்பெருமான் அருள்பாலித்துள்ளார். பரிபாலன சபை, திருப்பணிச் சபை மீதுள்ள நம்பகத்தன்மையாலும், செயற்பாட்டுத் திறனாலும்; உள்ளூரிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் விநாயகர் அடியார்கள் நன்கொடைகளை வாரிவழங்கியுள்ளார்கள். இதனால் இப்பாரிய புனித திருப்பணிகளை மிகவும் சிறப்பாகவும், உறுதியாகவும் நிறைவேற்றமுடிந்தது.

மேலும், அடியார்களினால் வழங்கப்பட்ட நன்கொடைகள் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் நோக்குடன் இத் "திருப்பணி மலரும் செயற்பாட்டு அறிக்கையும்" என்ற சிறப்பு மலர் அச்சிட்டு உங்கள் முன் சமர்ப்பிப்பதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக நாம் இங்கு குறிப்பிடுகையில் உதாரணமாக ஒரு உள்ளூராட்சிச்சபையின் நிர்வாகம் மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர் களினால் நிர்வகிக்கப்படுகின்றது. கட்டட நிர்மாணம், வீதி புனரமைப்புப் போன்ற அபிவிருத்திகளுக்குச் சபையினால் அவ்வப்போது தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன. இத் தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்குச் சபையின் பல கிளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் கடமையாற்றி நிறைவேற்றப்படுகின்றன. ஆனால், ஆலய நிர்வாகக் கட்டமைப்பு அவை போன்றதல்ல. திருப்பணிச் சபைக் கூட்டங்களில் திருப்பணிக்கான தீர்மானங்கள் சபையால் முன்மொழியப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றது. குறித்த திருப்பணிகளைச் செயற்படுத்துவதும், கணக்கு வைத்தல், பதிவேடுகள், கோவைகள் பேணல் போன்ற நிர்வாகச் செயற்பாடுகளைத் திருப்பணிச் சபையினாலேயே இங்கு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆனால், சில ஆலயங்களிற் கணக்கு வைத்தல் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டுச் செயற்படுத்தி வருகின்றார்கள். கோடி ரூபாய்களைக் கொண்ட திருப்பணிகளைச் சபையினால் மேற்கொள்ளப்படும்போது ஒரு அலுவலர் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு நியமிக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும். மேலும், மேற்பார்வை செய்வதற்கு ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சேவை அவ்வப்போது பெறப்படல் வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் ஓர் ஆரோக்கியமான நிர்வாகக் கட்டமைப் பையும், உறுதியான திருப்பணி விளைவுகளையும் பெறமுடியும்.

ஆனால் எமது ஆலயத் திருப்பணிச் சபையினால் எமது சக உத்தியோகத்தர்களான இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும், ஒரு பொறியியலாளரும் சேவை அடிப்படையில் அவ்வப்போது ஸ்தலத்திற்கு வருகைதந்து ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்தியுள்ளார்கள். மேலும், கணக்குவைத்தல், கோவைகள், பதிவேடுகள் பேணல், பகிரங்கக் கேள்வி, கூறுவிலை கோரல், பட்டியல் இடல் தொடர்பான துறைசார்ந்த பல் ஆண்டு அனுபவம் எமக்கு இருந்ததினால் இவ் வேலைத்திட்டமும் முற்று முழுமையாக எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஒரு சிறப்பு அம்சமாகும். எமது திருப்பணிச் சபையினால் இதுவரையில் ரூபா *123,33717.54*(12.33Million)க்குத் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கணக்குகளைப் பதிவுசெய்து இறுதிக் கணக்குவரை தயாரித்து, கணக்காய்வு செய்வதற்கு 1%மான ரூபா 120000 (ஒரு லட்சத்து இருபதாயிரம்) கட்டணம் வழங்குமாறு துறைசார்ந்தவர்களினாற் கோரப்பட்டது. ஆனால், இச் செயற்பாடுகளிற் கணக்காய்வு தவிர்ந்த சகல கணக்கு நடவடிக்கைகளும் முற்றுமுழுமையாக எம்மாற் பேணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாறு எம்மால் தயாரிக்கப் பட்ட கணக்கும், தொடர்பான கோவைகளும், பதிவேடுகளும், ஆவணங்களும் பதிவுசெய்யப்பட்ட பட்டயக் கணக்காளர் V. அரியரெட்ணம் அன் கோ நிறுவனத் தினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காகச் சபையால் வழங்கப்பட்ட கட்டணம் ஆக ரூபா 15000 மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிர்வாகக் காலப்பகுதியில் ஆலயத்தின் நிலையான சொத்துக்கள் கோடி ரூபாய்களுக்குமேல் அதிகரித்துள்ளமையினால் இத் திருப்பணி மலரும் செயற்பாட்டு அறிக்கையும் என்ற இச் சிறப்பு மலர் ஒரு சட்டரீதியான ஆவணமாகக் கருதப்படுகின்றது.

மேலும் ஆரோக்கியமான நிர்வாக செயற்றிறனை எதிர்கொள்ள வேண்டியுள்ள ஏனைய ஆலயங்களின் நிர்வாக சபையினருக்கும், திருப்பணிச் சபையினருக்கும் இம் மலர் ஒரு வழிகாட்டல் நூலாக அமையுமென நம்புகின்றேன்.

நன்றி

**இராசரத்தினம் அருணகிரி**
தலைவர்,
பரிபாலன சபை,
திருப்பணிச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலாநிதி ஆறு திருமுருகன் வாழ்த்துகிறார்

# பெருவளர்ச்சி கண்டுள்ள திருக்கோவில்

ஆன்மீகம் தளைத்தோங்கும் ஆனைக்கோட்டைப் பதியில் உயரப்புலம் என்கின்ற கிராமத்தில் அருள்சுரக்கும் உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயத்தில் பெரும்பாலான திருப்பணிகள் ஒரேகாலத்தில் சிறப்பாக நிறைவேறியதையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



இக்கோவில் காலத்துக்குக் காலம் திருப்பணிகள் செய்யப்பட்டு பெருவளர்ச்சி கண்டுவருகிறது. அடியார்கள் கொடுக்கும் காணிக்கையில் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு அதில் விநாயகர் ஆரோகணித்து வீதிஉலா வந்தமை சிறப்புக்குரிய விடயமாகும். அத்துடன் புதிய சப்பரம், அன்னதான மண்டபம், நீர்த்தாங்கி, இறுக்கமான தேரோடும் வீதி இன்னும் பல திருப்பணிகள் நிறைவுபெற்றுள்ளமை கண்டு மனப்பூரிப்பு ஏற்படுகின்றது. இத் திருக்கோவிலின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்ற பரிபாலன சபையினருக்கும் திருப்பணிச் சபையினருக்கும் அடியார்களுக்கும் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

"செஞ்சொற்செல்வர்" கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர் - துர்க்கா தேவஸ்தானம்,
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை,
உப தலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் வாழ்த்து

# விநாயகர் அருள் அனைவருக்கும் கிட்ட பிரார்த்திப்போமாக



உயரப்புலம் கிராமத்தில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஈழத்திலுள்ள விநாயகர் ஆலயங்களுள் சிறப்புடன் விளங்கும் ஓர் ஆலயமாகும். இவ்வாலயத்தை நிர்வகித்து ஆலயப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பரிபாலன சபையும், திருப்பணிச் சபையும் சிறப்பாக இயங்கிப் பல முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதையிட்டு நாம் இவர்களின் பணிகளைப் போற்றி வாழ்த்துகின்றோம். முக்கியமாக் ஆலயத்திற்குரிய சித்திரத்தேர், சப்பரம், அன்னதான மண்டபம், ஆலய மண்டபம் புனரமைப்பு, தேரோடும் வீதி ஆகியன சிறப்பான முறையில் இவர்களால் ஒப்பேற்றி வைக்கப்பட்டுள்ளன. இதனால் ஆலயம் புதுப்பொலிவுடன் இன்று விளங்குகின்றது.

எனினும், ஆலயத்தின்மீது மக்களை ஈர்ப்பது அதன் தோற்றம் மட்டுமன்று அங்கு நேரகாலம் தவறாது நடைபெறும் நித்திய, நைமித்தியக் கிரியைகளே என்பது சொல்லித் தெரிவதில்லை. அலையும் மனதை லயப்படுத்தி ஆண்டவனின் அருட்கடாட்சத்தைப் பெறுவதற்கு இவையே வழிவகுக்கின்றன. ஆறுமுகநாவலர் பெருமான் கூறியவாறு இறைவன் இச்சரீரத்தை நமக்களித்தது. முறைப்படி அவனை வழிபட்டு முத்தி இன்பம் பெறுவதற்கு ஆகும். துர்அதிர்ஷ்டவசமாக இன்று பெரும்பாலான ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் இறைவன்மீது நம்மை ஈர்க்கும் தகைமையை இழந்து நிற்கின்றன. நம்மை மறந்து இறைவன் திருத்தாளில் எம்மை இட்டுச் செல்வதற்கான ஒரு சாதனமாக ஆலயம் அமைதல் வேண்டும் என்ற நோக்கிலேதான் நம்முன்னோர் ஊர் தோறும் ஆலயங்களை அமைத்தனர். "கோயில் இல்லாத ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி.

ஆதலால் இன்றைய சூழலில் நம்மக்கள் பலவற்றை இழந்து சோர்ந்து கையறு நிலையில் நிற்கும் எமக்கு ஆறுதல் அளித்து, எதிர்காலம் பற்றித் தென்பும் தெளிவும் தரவல்லது. முறையான ஆலய வழிபாடே என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

இத்தகைய பணிகளில் முன்னின்று ஆலய பரிபாலன சபையினர், திருப்பணிச் சபையினர் உழைப்பின் காலத்தின் தேவையை இவர்கள் பூர்த்தி செய்வார்கள் என்பது நமது அசையாத நம்பிக்கையாகும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

**பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்**
(தலைவர், இந்துசமயப் பேரவை), யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பிரதமகுருவின் ஆசி

எம்பெருமான் ஸ்ரீ உத்துங்க விநாயகருக்குப் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறும் இன்றைய நன்னாளில் இவ்வாலயத்தின் பிரதம குருவான 1965ஆம் ஆண்டு முதற் பல வருடங்கள் கடமையாற்றி பல கும்பாபிஷேகங்களை நடத்தியவரென்ற முறையில் உளமார மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.



இவ்வாலயத்தில் 1971ஆம் ஆண்டு கட்டுத்தேரிலேதான் விநாயகப் பெருமான் வீதியுலா வருவதும் வழக்கம். நிஷாப் புயல் காரணமாக இக்கட்டுத்தேர் அரசமரம் வீழ்ந்து முற்றாகச் சேதமடைந்தது. அதனால் வாடகைக்குக் கட்டுத்தேர் அமைத்துச் சுவாமி சில வருடங்கள் வீதிஉலா வந்தது. எனவே திரு. இராசரத்தினம் அருணகிரி அவர்களைத் தலைவராகக் கொண்ட இன்றைய திருப்பணிச் சபையினரும், பரிபாலன சபையினரும் பூரண உதவியாகத் தீவிர முயற்சியினை மேற்கொண்டு இயங்கியதாற் குறுகியகால இடைவெளியிற் பிரமாதமான புதிய சித்திரத்தேர் இன்று நம்முன்னால் வெள்ளோட்டம் கண்டுள்ளது.

இத்துடன் தேர்த் தரிப்பிடமும், தேரோடும் வீதி எனப் பல திருப்பணிகளைப் பாரிய பொறுப்புக்களுடன் நிறைவேற்றி மகிழ்ச்சி கொண்டாடும் இவ்வேளையில் நானும் நான்கு தசாப்தங்கள் உங்கள் ஆலயத்திற் பிரதம குருவாக இருந்தமையால் ஸ்ரீ உத்துங்க விநாயகர் திருவருள் அனைவருக்கும் மேலோங்கி இவ்வளவு விரைவாக சித்திரத்தேரை அமைத்துத்தந்த சிற்பாசாரியார் திரு. ஜெயப்பிரகாஷ் அவர்களுக்கும் ஆசி கூறி, அனைத்து விநாயகர் அடியார்களையும் வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ க. குகதாசக் குருக்கள்**
முன்னாள் பிரதமகுரு, ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயம்,
உடயரப்புலம், ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினரின் வாழ்த்து

# இராஜகோபுரம் அமைக்கப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறப் பிரார்த்திக்கின்றோம்

ஆனைக்கோட்டையிலுள்ள உயரப்புலம் என்கிற அழகிய கிராமத்தில் கோயில் கொண்டு வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ உத்துங்க விநாயகர்



ஆலயத்திற்குச் சமகாலத்தில் பல அத்தியாவசியத் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறியதையொட்டி "திருப்பணி மலரும் செயற்பாட்டு அறிக்கையும்" என்கிற சிறப்பு மலர் வெளி வருவதையிட்டு இவ்வூர் மக்களாகிய நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இம்மலர் எதிர்கால சந்ததியினர் உத்துங்க விநாயகர் ஆலயம் சம்பந்தமான பல விடயங்களை அறிவதற்கு ஓர் வரலாற்று ஆவணமாக அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இவ்வாலயம் **1915**ஆம் ஆண்டளவில் எம் முன்னோர்களால் ஓர் சிறிய ஆலயமாக உருவாக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருப்பணிகள் நடைபெற்று **26.01.1983**இலும் தொடர்ந்து **02.11.1998**இலும் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை நடாத்தி எம் மக்கள் தெய்வீகப் பணிகளை நிறைவேற்றினார்கள். எனினும் ஆலயத்திற்கு அத்தியாவசியமான திருப்பணிகளை நிறைவேற்றத்தவறியது பெருங்குறையாக இருந்தது. இதற்கு எமது நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களும் அதனால் ஏற்பட்ட சீரற்ற நிலையும் ஒரு கா்ரணம் என்பது யாவரும் அறிந்ததே. தற்போது நமது நாட்டில் மீண்டும் சமாதானம் உருவாகிவரும் காலத்தில் எமது ஆலயத்திற்கு அத்தியாவசியமான திருப்பணிகள் அனைத்தும் மக்களின் பூரண ஒத்துழைப்புடன் நிறைவேறி விநாயகப் பெருமான் அழகிய புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து ஸ்திரமாகத் தாரிட்டு அமைக்கப்பெற்ற திருவீதியில் ஊர்மக்கள் கூடி ஆண்களும் பெண்களுமாக வடம்பிடித்து இழுக்க விநாயகப்பெருமான் வீதி உலாவந்து அருள்பாலித்த காட்சியை நாம் கண்டதை என்றுமே மறக்கமுடியாது.

"ஒரு ஆலயத்தைப் புனரமைத்து அத்தியாவசியத் திருப்பணிகளைச் செய்வோர் ஆலயத்தை உருவாக்கியவர்கள் பெறும் பலன்களிலும் பார்க்க பன்மடங்கு கூடியது" என்பது சைவ அநுபூதிமான்களின் முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் சென்ற **02.11.1998**இல் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று பதின்நான்கு வருடங்களுக்கு மேலாகிறது. சைவ ஆகம விதிப்படி எமது ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடாத்தவேண்டிய காலம் கடந்துவிட்டது. இதனால் மூர்த்திகரம் குறையவிடாமல் இருக்கக்கூடியதாக விரைவில் கும்பாபிஷேகம் நடாத்த விநாயகரின் அருள் கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு.

தற்போதைய பரிபாலன சபையினரும் திருப்பணிச் சபையினரும் ஆளுமையும், நிர்வாகத் திறமையும் நிறைந்த அனுபவமும் பெற்ற தலைவரின் தலைமையின் கீழ் அனைவரின் நம்பகத்தன்மையுடனும் ஒத்துழைப்புடனும் திருப்பணிகளை வெற்றி கரமாக நிறைவேற்றியதை மனநிறைவுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களின் காலத்தில் எமது ஆலயத்திற்கு "இராஜகோபுரம் மற்றும் கல்யாண மண்டபமும்" அமைக்கப்பெற்று மஹா கும்பாபிஷேகமும் நடைபெற விநாயகப் பெருமானின் கடாட்சம் கிடைக்க இருகரம் கூப்பிப் பிரார்த்திக்கின்றேன்.

**ஆ. சி. கணேசவேல் J.P.**
(அகில இலங்கை சமாதான நீதிவான்)
பிரதேசசபை உறுப்பினர்.
வலிகாமம் தென்மேற்கு.
முன்னாள் செயலாளர்.
பரிபாலன சபை.
திருப்பணிச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் ...........

# ஆரம்ப செயற்பாடுகளும் திருப்பணிகளை ஆவணப்படுத்தலும் ஆண்டறிக்கையும்

இலங்கையின் வடபால் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்த பெருமையுடைய யாழ்ப்பாணத்தின் தென்மேற்குத் திசையில் உயரப்புலம், ஆனைக்கோட்டை அமைந்துள்ளது. இந்துமக்கள் சிறப்புற்று வாழ்கின்ற கொக்குவில், சுதுமலை, ஆனைக்கோட்டையைச் சூழவுள்ள கேந்திர நிலையமான உயரப்புலத்திற் பல்லாண்டு களுக்குமேலாகக் கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார் அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர். இவ்வாலயத்தின் கட்டுத்தேர் 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட "நிஷா"ப் புயற் காற்றினால் அரசமரம் அதன்மேல் விழுந்து மீள்கட்டுமானம் செய்யமுடியாத நிலையில் இருந்தது. இந்நிலையில் 2011ஆம் ஆண்டுவரையில் ஒரு சிறிய கட்டுத்தேர் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அத்தேரிலே விநாயகப்பெருமான் எழுந்தருளி வந்து அடியார்களுக்கு அருள்பாலித்துள்ளார். அரசமரம் கட்டுத்தேரின் மேல் விழுந்து தேர் உருக்குலைந்ததிலிருந்து ஒரு சித்திரத்தேரில் வீதிவலம் வந்து அருள்பாலிக்க வேண்டுமென இயற்கையூடான அற்புதத்தை விநாயகப்பெருமான் அடியார்களுக்கு உணர்த்தியுள்ளார். இந்நிலையில் 2009ஆம் ஆண்டு மகாசபைக் கூட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. இச்சபையால் என்னைத் தலைவராகக் கொண்ட ஒரு பரிபாலன சபையும் திருப்பணிச் சபையும் உருவாக்கப்பட்டது.

### திருப்பணிகளை இனங்காணுதலும், நிர்மாணப்பணிக்கான இடத்தெரிவும்

பரிபாலன சபையும், திருப்பணிச் சபையும் சமகாலத்திற் கூட்டப்பட்டு ஆலயத்தின் முக்கிய திருப்பணிகள் தொடர்பாக ஆராய்ந்து இனங்காணப்பட்டது. அதில் சித்திரத்தேர் உருவாக்கல், இரதம் தரிப்பிட நிர்மாணம், ஆலய வெளிவீதி நிர்மாணம் முதலியன முக்கிய திருப்பணிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டன. அடுத்து இரதம் தரிப்பிட நிர்மாணத்திற்கான இடத்தெரிவுக்கான வேலைத்திட்டம் மேற் கொள்ளப்பட்டது. அதற்குரித்தான இடத்தில் அதனை நிர்மாணிப்பதற்கு ஆலய வீதியில் நிலம்பற்றாக்குறையாக இருந்தது. இதனால் ஆலய வெளிவீதி ஆதனத்தின் வட.கிழக்கு எல்லையிற் குகதாசக்குருக்களின் ஆதனத்திலிருந்து 10 அடி அகலமான நிலம் பெறப்பட்டது. இதற்குச் சமமான பரப்பளவு நிலம் (Give and take Policy) கொடுத்து மாறுதல் முறையில் ஆலயப் பணிமனை ஆதனத்தின் வடக்கு எல்லையில் இருந்து நகர்த்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. பதிவுசெய்யப்பட்ட நிலஅளவையாளர் மூலமாக உரிய வரைபடத்துடன் (Survey Plan) இவ்வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் தேருக்குச் சுவாமி எழுந்தருளும்போது நேர்கோட்டுப் படிகளை நிர்மாணிப் பதற்குப் பொருத்தமற்றதாகக் காணப்பட்டது. இதனால் இருவழிப் படிகள் நிர்மாணிக்க வேண்டியிருந்தது. சுவாமி படிக்கூரையின் வடக்குத் திசைப்படிகளால் தேரில் ஏறி படிக்கூரையின் தெற்குத் திசையால் இறங்கக்கூடிய முறையில் படிகள் நிர்மாணிக்க வேண்டியிருந்தது.

## நிதி ஏற்பாட்டிற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்

குறித்த திருப்பணிகளை மேற்கொள்வதற்கான நிதியைத் திரட்டுவதற்கு உள்ளூர் கிராம அடியார்கள், வெளிநாட்டு அடியார்கள், அன்பர்கள் நண்பர்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள்மூலமாக விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலயச்சூழலில் உள்ள அனைத்து அடியார்கள் வீடுகளுக்கும் திருப்பணிச் சபை உறுப்பினர்கள் சென்று திருப்பணிப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு அவர்களால் வழங்கக்கூடிய நன்கொடைகள் பட்டியலிடப்பட்டது. மேலும் குறித்த திருப்பணிக்காக ஆலயத் திருப்பணிச் சபையின் பேரில் இலங்கை வங்கி - மானிப்பாயில் நடைமுறைக்கணக்கு (Current Account) ஆரம் பிக்கப்பட்டது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருப்பணி வேலை முன்னேற்றச் செயற் பாடுகள் வெளிநாட்டு அடியார்களுக்கு அவ்வப்போது இணையத்தளமூடாகக் காண்பிக் கப்பட்டது. 2010ஆம் ஆண்டில் அனுசரணையாளரின் நிதி ஏற்பாட்டின் மூலம் வேலை முன்னேற்றச் செயற்பாட்டுத்திறனை வெளிப்படுத்தக்கூடிய இடைக்கால ஆண் டறிக்கை மலர் வெளியிடப்பட்டது. இவ்விழிப்புணர்வுகளினால் உயரப்புலம், கொக்குவில், சுதுமலை, ஆனைக்கோட்டை, வெளிநாட்டு அடியார்கள், அன்பர்கள், நண்பர்கள் எனப் பலரும் நன்கொடைகளை வாரி வழங்கியுள்ளார்கள்.

## நிர்வாகச் செயற்பாடுகள்

சமகாலத்தில் பொது நிதியைப் பயன்படுத்தித் திருப்பணிகள் மேற்கொள்ளப் படும்போது பின்பற்றப்படவேண்டிய திட்டமிடல் (Planing) பகிரங்கக் கேள்வி நடைமுறைகள் (Public Tender Pro Cedure) நிதிப்பிரமாணங்கள் (Financial Regulations), கூறுவிலைகள் கோரப்படுதல் அத்துடன் துறைசார் கணக்கீட்டு முறைகள் என்பன முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளன. அதாவது, ஓர் அரச நிர்வாக இயந்திரங்களினால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் உள்வாங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒரு பொது நிதியைக் கையாழும்போது வகைகூறவேண்டிய பொறுப்பு (Accountability) எமக்கு உண்டு. அதிலும் முக்கியமாகத் தலைவருக்கு அதிக பொறுப்புள்ளது. சகல திருப்பணிக் கொடுப்பனவுகளும் காசோலைமூலமாகவே வழங்கப்பட்டுள்ளன. அதற்குக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு, உரிய ஆவணங்கள் இணைக்கப்பட்டு தலைவர் பொருளாளரின் ஒப்பத்துடன் இரு திருப்பணிச் சபை உறுப்பினரின் ஒப்பத்துடனே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்குக் கணக்காய்வு செய்வதற்காகப் பாரமளிக் கப்பட்டுள்ள கோவைகள், பதிவேடுகள், உறுதிச்சீட்டு, கட்டுகள் என்பனவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிடுவதன் மூலமாக மேலதிக தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். (கணக்காய்வுக்குப் பாரமளிக்கப்பட்ட பட்டியல் இம்மலரில் இணைக்கப்பட்டுள்ளது)

**அடியார்களின் நன்கொடை வரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள திருப்பணிகளை ஆவணப்படுத்தல்**

01. அழகிய சித்திரத்தேர் 28½' உயரம்

02. இரதம் தரிப்பிடம் 20' x 20' x32' இருவழிப் படிக்கூரை

03. இரதம் தரிப்பிட வைரவர்

04. ஆலய வெளிவீதி 22' அகலம் 550' நீளம் தரை உயர்த்தல், கல்லிட்டுத் தாரிடல், 2ஆம் தடவை தாரிடல்

05. ஆலய வெளிவீதி மட்டுமல்ல வெளிவீதி சுற்றுப்புறம் முற்றாகத் தரையமைப்பு உயர்த்தப்பட்டது.

06. அர்த்த மண்டபம், யாக மண்டபம் கூரை மீள் நிர்மாணம்

07. சகடை தரிப்பிடக்கூடம் பாதுகாப்பு ஏற்பாட்டுடனான கேற்றும் (இரண்டு சகடைகள் தரித்து நிற்கக்கூடியது)

08. நடைபெற்றுக்கொண்டிருக்கும் அன்னதான சமையல், களஞ்சிய மண்டபம் 28½' x 16½'

09. சுவாமிக்கான படையல் மேசை : வேம்புப் பலகையில் 02

10. பாதுகாப்புப் பெட்டகம் (வடக்கயிறு, பித்தளைத் தூக்கம், கலசம், வாகைமாலை பாதுகாப்பதற்கானது)

11. ஆலய உள்மண்டப உள்ளக பீலிகள் மாற்றீடு செய்தமை. ஆலய உள்மண்டப, வெளிமண்டபத் தாழ்வாரங்களுக்கு நீரோடி பீலியும், நீரோடிப் பெட்டியும் கூறுவிலை கோரப்பட்டு கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆலய முன்மண்டபக் கூரைக் கேவலுக்குப் பலன்ஸ் போட் (Balance Board) லெவல் சீற் அடித்தமை, முன் மண்டபக் கேவலிற் பிள்ளையார் வீற்றிருக்கும் காட்சிகள், நீர்த்தாங்கியிலிருந்து முன்மண்டப முன்பகுதிவரை கொங்கிறீற் நடைபாதை அமைப்பு.

12. பொங்கற் கொட்டகைப் புனரமைப்பும்; உள்மண்டபப் பழைய நீர்த்தொட்டி அகற்றலும், தரை நிலம் இழுத்தலும், பொங்கற் கொட்டகைக்குப் பாதுகாப்புச் சுவரும், இரும்புக் கவசபடல்கள் அமைப்பும்.

13. மேசன் வேலைகள் மண்டப முகட்டு ஓடு, பீலி ஓடுகள் கட்டியமையும், செவ்வை பார்த்தலும்.

உள்மண்டபம், வெளிப்பகுதி, தீந்தையிடல் (Water paint, Oil paint) திருத்தங்களும், பரிவார மூர்த்திகளான சந்தானகோபாலர், முருகன், மஞ்சத்தடி, கிணற்றுக்கு மூலஸ்தானப் பகுதியில் இருந்து செல்லும் கதவு உட்பட இரும்பினாற் செய்யப் பட்டுப் பொருத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நடைமுறைச் சொத்துக்கள் கொள்வனவு

1) ஒலிவாங்கிக்கான பொருட்கள்

2) வெளிவீதி சுவாமி வலம் வருவதற்கான மின் இணைப்புக்கான வயர்கள்.

3) எழுந்தருளிப் பீடமும், திருவாசியும், பிள்ளைத்தண்டும்.

4) திருவாசிகள், தீபக்கால், கொடிஸ்தம்பம், தாம்பாளம் திருத்தமும், பொலிசிங், (கணக்கறிக்கை, பின்னிணைப்பில் மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.)

15. முன்மண்டப சுற்று 20" சுவர் அமைப்பும் சுவர் இரு பக்கங்களுக்கும் மாபிள் பதித்தமையும் சுற்று ஸ்ரீல் கிறில் அமைப்பும் அமரர் கந்தையா மகாதேவன் ஞாபகார்த்தமாக அவர்களின் நிதி ஏற்பாட்டில் திருப்பணிச் சபையால் நிர்மாணிக்கப்பட்டது.

**திருப்பணிச் சபையின் அனுசரணையுடன் அடியார்களின் நேரடி நிதிக் கொடுப்பனவுடன் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகளை ஆவணப்படுத்தல்**

01. ஆலய வெளிவைரவர் மண்டபம் நிர்மாணம் அமரர் சுப்பிரமணியம் பூபாலசிங்கத்தின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரால் மேற்கொள்ளப் பட்டது.

02. தண்ணீர்த் தாங்கியும், நீர்ப் பம்பியும் இணைப்புகளும் அமைப்பு அமரர் நாகலிங்கம் முத்துப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரால் மேற்கொள்ளப் பட்டது.

03. சப்பரமும், சப்பர தரிப்பிட நிர்மாணமும் அமரர் தையல்நாயகி பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினராற் கட்டுமானம் செய்யப் பட்டது.

04. கையிலாசவாகன ஊர்தியும், பாதுகாப்பு உறையும் உபயகாரர்: செல்லத்துரை குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

05. புதிய கல்லு ரயர் சகடை அமைப்பு சிற்பாசாரியர் ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஷ் அவர்களினால் பழைய தேரின் உதிரிப்பாகங்களுடன் நன்கொடையாகச் செய்து வழங்கப்பட்டது.

**பரிபாலன சபைப் பொது நிதியுடன் இருசபையின் உறுப்பினர்கள், அன்பர்கள், நண்பர்களின் பங்களிப்புடனான திருப்பணி**

ஆலய நித்தியபூசகர் பணிமனை புனரமைப்பானது பரிபாலன சபைப் பொது நிதியுடன் இரு சபைகளின் உறுப்பினர்கள், அன்பர்கள், நண்பர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

01. ஆலயப் பணிமனை ஆதனத் தெற்கு, மேற்கு எல்லைகள் தூண்கள் இட்டுத் தகரம் பூட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. சமையற் கூடக் கூரை மீள்நிர்மாணம்
03. நிலை, யன்னல் மாற்றியமை, மேஸ்திரி வேலைகள்
04. ஆதனத்திற்கு இரும்பு கேற் அமைப்பு (இரு சிறகுகள் உள்ளது)
05. மோட்டரும் இணைப்புகளும் பாதுகாப்பு அறை நிர்மாணம்
06. வீடு முற்றாகத் தீந்தையிடப்பட்டமை இம் மனை பல்லாண்டு காலமாகத் திருத்தப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

இவ்வேலைத்திட்டம் 2010 தொடர் வேலையுடன் 2011ஆம் ஆண்டும் உட்பட ரூபா 273706/= செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா 70500 சபை உறுப்பினர்கள், அன்பர்கள், நண்பர்களின் நன்கொடையாகும் என்பதையும் அறியத்தரு கின்றோம்.

**பரிபாலன சபை,**
**நிலையான வைப்பிலுள்ள நித்திய பூசை நிதி பராமரிப்பு நிதி**

1992ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் நித்திய பூசகருக்கான படிவழங்குவதற்கும், நித்திய பூசைச் செலவுக்கும், நிதி ஏற்பாடு எதுவும் இருக்கவில்லை. அவ்வாறே ஆலயப் பராமரிப்புச் செலவுகளுக்கும் நிதி ஏற்பாடு இருக்கவில்லை. ஆலய உண்டியல் வரவும், ஆலய உபயக்கட்டண வரவு மூலமாகக் குறித்த செலவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆலயப் பூசகர்படி, பாரமரிப்புச் செலவுகள் காலத்திற்குக்காலம் அதிகரித்ததினால் குறித்த ஆலய வருமானங்களைக் கொண்டு குறித்த செலவுகளை மேற்கொள்ள முடியாத நிலை இருந்தது. இதனால் 1992ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட இடைக்காலப் பரிபாலன சபையினால் பூசை நிதியாக ரூபா 152080/= சேகரிக்கப்பட்டு நிலையான வைப்பில் இடப்பட்டது. 1992இற்கு முற்பட்ட காலப்பகுதியிற் சபைக்கு அப்பால், குறிப்பிட்ட சில உறவினர்களின் பங்களிப்புடன் ஒரு தொகை நிதி நிலையான வைப்பில் இடப்பட்டிருந்தது. குறித்த சபையின் மேற்படி நடவடிக்கையினால் அக்குழுவின் தலைவர் திரு.க.சி.கயிலாசபிள்ளை அவர்களினால் அவர்களது நிலையான வைப்பில் இருந்த தொகையைச் சபையிடம் பாரமளித்தார். இத்தொகை ரூபா 40,000/= ஆலயப் பராமரிப்புக்கான நிலையான வைப்பிலும் ரூபா 10,000/= நித்திய பூசைக்கான நிலையான வைப்பிலும் இடப்பட்டது. வருடாவருடம் நிலையான வைப்பு வட்டியின் ஒரு பகுதி நிதியும் ஏனைய ஆலய வருமானங்களின் மூலம் குறித்த இரண்டு வகையான நிலையான வைப்புகளில் மேலும் நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் திருப்பணி நன்கொடை வரவு அல்லாத வட்டி மீதியும் (நிலையான வைப்பு) ஆலயக் கட்டணமும் ரூபா 305000/= நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| நித்திய பூசை நிலையான வைப்பில் | ரூபா 8,52,080.00 |
| பராமரிப்பு நிலையான வைப்பில் | ரூபா 1,40,000.00 |
| மொத்தம் | ரூபா 9,92,080.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறந்த, ஆரோக்கியமான குருக்களை நித்திய பூசகராக நியமிப்பதென்றால் குறைந்தது மாதச் சம்பளம் ரூபா 15000/= வழங்கப்படவேண்டியிருக்கின்றது. அவ்வாறு குருக்களுக்குச் சம்பளமும் வழங்கி; பூசைச் செலவுகள், ஒவ்வொரு மாதத்திற்கான ஆலயப் பராமரிப்புச் செலவுகளுக்கும் மேற்படி வருமானம் பற்றாக்குறையாக உள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இந்நிலையை அடியார்கள் உணர்வுபூர்வமாகச் சிந்தித்து, இந்நிலையான வைப்பில் இடுவதற்கு மேலும் நிதி பங்களிப்புச் செய்து ஆலயத்திற்கு ஒரு நிலையான வரவுகள் கிடைப்பதற்கு உதவ முன்வரவேண்டும் என்று விநாயகர் சார்பில் விநயமாக விண்ணப்பிக்கின்றோம். ஆரோக்கியமான ஆலய வருமானம் கிடைத்தால் ஒரு நிரந்தரக் குருக்களை நித்திய பூசகராக நியமிக்கமுடியும் என்பதையும் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

## சகடை தரிப்பிடம் நிர்மாணம்

இந்நிர்மாணப் பணிக்கு இந்து கலாசாரத் திணைக்களம் பங்களிப்பாக ரூபா 100000/= நன்கொடையாக வழங்கியிருந்தனர். ஆனால், பாதுகாப்புடனான இரண்டு சகடைகள் தரித்து நிற்கக்கூடிய குறித்த கட்டட நிர்மாணத்திற்குத் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 160,000 வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், இதற்காகக் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகை 102894/= மட்டுமே. மீதி மூலப்பொருட்கள் ஆலயப் பணிமனைப் பழைய ஓடுகள், அடியார்களினால் வழங்கப்பட்ட பனை மரங்களை வெட்டிப் பெறப்பட்ட கூரைக்கான மரங்கள் மற்றும் திருப்பணி மீதி மூலப்பொருட்களும் பயன்படுத்தப்பட்டு உறுதியான நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஆண்டறிக்கை வெளியிடல்

2009 செப்ரெம்பர் முதல் 2012 வரையான ஆண்டுகளுக்கான திருப்பணி வரவு, செலவு அறிக்கையும், 2011 ஜனவரி முதல் 2012 செப்ரெம்பர் வரையான பரிபாலன சபை வரவு, செலவு அறிக்கையும் இம்மலரில் வெளியிடப்பட்டுள்ளது. அனுசரணையாளரின் நிதி ஏற்பாட்டில் 2010ஆம் அண்டில் வெளியிடப்பட்ட இடைக்காலத் திருப்பணி வரவு, செலவுகளும் இவ் ஆண்டறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளது.

கணக்கியற் கோட்பாட்டிற்கும், விதிமுறைகளுக்கும் அமைவாகச் சான்றோரும் ஏனையோரும் இலகுவிற் புரிந்துகொள்ளக்கூடிய நவீனமுறையில் உரிய இணைப்புக் குறிப்புகளுடன் முற்றிலும் இக்கணக்கறிக்கை எம்மால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இக்கணக்கறிக்கைகள் திருப்பணிச் சபையினாலும், பரிபாலன சபையாலும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அரியரெட்ணம் அன் கம்பனி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு, அவர்களது குறிப்புடன் இவ் ஆண்டறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை இங்கு கோடிட்டுக்காட்ட விரும்புகின்றோம். திருப்திகரமான முறையில் இக்கணக்கறிக்கையை நாமே தயாரித்துக் கணனியிலிட்டு, கணக்காய்வுக்குச் சமர்ப்பித்துள்ளதால் மேலதிக கூடுதலான கணக்காய்வுக் கட்டணம் செலுத்தவேண்டிய நிலை ஏற்படவில்லை. ஆனால், மிகக் குறைந்த கணக்காய்வுக் கட்டணமாக ரூபா **15000** மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. குறைந்தது **1%** கட்டணமாக ரூபா **120000** வழங்கப் படல் வேண்டும். கணக்காய்வுக்குப் பாரமளிக்கப்பட்ட எம்மால் பேணப்பட்டுள்ள பதிவேடுகளையும், கோவைகளையும் இம்மலரிற் பார்வையிடலாம்.

திருப்பணிக் கொடுப்பனவுகள் அனைத்தும் காசோலைமூலமே மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறு 410 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு, உரிய ஆவணங்கள் இணைக்கப்பட்டு, காசோலை வரையப்பட்டு, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு பரிபாலன சபை உபயக் கொடுப்பனவுகளுக்கும், ஆலயப் பணிமனைப் புனரமைப்பிற்கும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் தயாரிக்கப் பட்டு உரொக்கமாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்பாடலுக் கான (வெளிநாட்டு அடியார்கள், நிர்மாணப் பணிகள் ஒப்பந்தகாரர், வேலையாட்கள், மூலப்பொருள் விநியோகஸ்தர்கள், ஏனைய வேலைஸ்தல விடயங்களுக்கு) தொலை பேசிக் கட்டணமாகப் பல்லாயிரக்கணக்கான பணம் செலவிடப்பட்டுள்ளது. மோட்டார் வண்டிகள் பல பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் உப சரணைக்காகவும் செலவிடப் பட்ட நிதி இவை அனைத்தும் எமது சொந்தப் பணத்திலிருந்தே மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இம் மலர் வெளியீட்டிற்கான அச்சடித்தல் செலவுகளையும் இரு சபை உறுப்பினர் கள், அடியார்கள், அன்பர்கள், நண்பர்களின் நிதி அனுசரணையுடன் வெளியிட்டுள்ள மையையும் இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

சுருக்கமாகக் குறிப்பிட்டால் ஸ்பெயின் நாட்டின் ஒருதுளி மழைகூடக் கடலுக்குச் செல்ல விடுவதில்லையாம். அம் மழைநீர் சேகரிக்கப்பட்டு விவசாயம் செய்யப் பயன்படுத்துகின்றார்களாம். இவ்வாறே எமது திருப்பணி வேலைத்திட்டங்கள் விரயமில்லாது ஆரோக்கியமாகவும் திருப்திகரமாகப் பூரணப்படுத்தப்பட்டு இவ் ஆண்டறிக்கையை வெளியிடுவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இராசரத்தினம் அருணகிரி
**தலைவர்,**
**பரிபாலன சபை,**
**திருப்பணிச் சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் அறிக்கை

உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகருக்குச் சித்திரத்தேர் உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் விநாயக அடியார்களின் மனதிலே எழுந்தபோதும் அதனைச் செயற்படுத்த எவரும் முன்வரவில்லை. நாட்டுச் சூழ்நிலை காரணமாகத் திருப்பணியை நிறைவு செய்வதற்கு நிதிகிடைக்குமா? - என்ற மனப்பயமே தயக்கத்திற்குக் காரணமாகும்.

2008 நவம்பரில் ஏற்பட்ட நிஷாப் புயலின்மூலம் ஆலய முன்றலில் நின்ற அரசமரத்தைக் கட்டுத்தேரின்மீது வீழ்த்தித் தேரை சேதமாக்கியதன்மூலம் "இனியாவது எனக்குச் சித்திரத்தேரை உருவாக்குங்கள்; உறங்காதீர்கள்" என உத்துங்க விநாயகன் அடியார்களின் மனதிலே பிள்ளையார் சுழியைப் போட்டார். இச்செயல் அடியார்களின் மனதிலே நம்பிக்கையை ஏற்படுத்தியது. சென்ற மகாசபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையினதும், திருப்பணிச் சபையினதும் பொருளாளராகத் தெரிவுசெய்யப்பட்டேன்.

சித்திரத்தேர் அமைப்பதற்கான செயற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றன. உள்ளூரிலும், வெளியூரிலும் உள்ள விநாயகர் அடியார்களிடம் தொடர்புகொண்டு நிதிசேகரிப்பை ஆரம்பித்தோம். தற்காலிகத் தேர்க்கொட்டகை அமைக்கப்பட்டது. சித்திரத் தேருக்கான அச்சுவைத்தல் நிகழ்வும் இடம்பெற்றது.

தலைவரின் ஆலோசனையின்பேரில் அவரது முயற்சியினால் 01-01-2010இல் இருந்து 31-12-2010 வரையான இடைக்காலக் கணக்கறிக்கையும் இக்காலத்தில் நடைபெற்ற திருப்பணிச் சபையின் செயற்பாடுகளும் சபையினால் செயற்படுத்த எண்ணியுள்ள திருப்பணிகளையும், அதற்குத் தேவைப்படும் நிதியினையும் வெளிப்படுத்தி ஆண்டறிக்கை 2010 மலர் வெளியிடப்பட்டது. இம் மலரினை வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கும் அனுப்பிவைத்தோம். மலர்வெளியீடும் இங்குள்ள இளைஞர்களின் முயற்சியினால் தேர்த் திருப்பணி சம்பந்தமான செயற்பாட்டு நிகழ்வுகளையும், தேர்த் தரிப்பிடம், தேர் உலாவரும் தார்வீதி அமைத்தல் போன்ற நிகழ்வுகளையும் உடனுக்குடன் இணையத்தளம்மூலம் வெளிநாடுகளில் உள்ளவர்கள் பார்வையிட வழியமைத்தோம். இவ்விரு செயற்பாடுகளின்மூலம் எமக்குத் தேவையான நிதிவளம் நிறைவாகக் கிடைப்பதற்கு வழியமைத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விநாயகர் அடியார்களின் மனம் நிறைந்த அன்பளிப்புகள்மூலம் நாம் எடுத்த பணியை நிறைவுசெய்து 04-05-2012இல் உத்துங்க விநாயகர் புதிய சித்திரத்தேரில் அருள்பாலித்தமை கண்கொள்ளாக் காட்சியாகும். சித்திரத்தேர், தேர்த் தரிப்பிடம், வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலா வருவதற்குத் தார்வீதி ஆகிய மூன்று திருப்பணி வேலைகளும் ஒருங்கே அமையப்பெற்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்திருப்பணி வேலைகள் யாவும் எவ்வித இடையூறுமின்றி இனிது நடைபெற்று; விநாயகர் அடியார்களின் நீண்டகாலக் கனவு நனவாக எமக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் உத்துங்க விநாயகனை வணங்குகின்றோம்.

இப்பாரிய திருப்பணிகளுக்கான வரவு செலவுகள் யாவும் பற்றுச் சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், கொள்முதல் சிட்டைகளின்மூலம் வெளிப்படுத் தப்பட்டுள்ளன. தலைவரின் கணக்கீட்டுத்துறையில் உள்ள அனுபவம் ஆற்றலின் மூலமும், அவரின் வழிகாட்டலின்படி இக்கணக்குகள் பராமரிக்கப்பட்டு வந்தன. ஆலய வரவு செலவுக் கணக்குகளைப் பட்டயக் கணக்காளர் திரு.வே.அரியரெட்ணம் அவர்களால் (அரியரெட்ணம் அன் கோ) ஆய்வு செய்யப்பட்டு எமது சபையினால் வெளியிடப்பட்டுள்ளன. இத்திருப்பணிக்கு உதவி வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறி; விநாயகர் அடியார்கள் அனைவருக்கும் உத்துங்க விநாயகன் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

**க. ஜெயபாலன்**
**கௌரவ பொருளாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம்

ஆனைக்கோட்டை - உயரப்புலம்

# ஸ்ரீ உத்துங்கவிநாயகர் ஆலய திருப்பணிச்சபை

(இந்து சமய கலாச்சார அமைச்சில் பதிவு செய்யப்பட்டது இல. HA/5/CA/538)

**ANAICODDAI – UYARAPPULAM SRI UTHUNGAVINAYAGAR TEMPLE**

**THIRUPANI SABAI**

(Rgd. in the Ministry of Hindu Religion and Cultural Affairs No. HA/5/CA/538)

*UYARAPPULAM*
*ANAICODDAI.*

உயரப்புலம்
ஆனைக்கோட்டை.

……/……/20……

தலைவர்:
திரு.இ.அருணகிரி

President:
Mr.R.Arunagiri

செயலாளர்:
திரு.அ.கணேசமூர்த்தி

Secretary:
Mr.R.A.Ganesamoorthy

பொருளாளர்:
திரு.க.ஜெயபாலன்

Treasurer:
Mr.K.Jeyabalan

அங்கத்தவர்கள்:
திரு.பொ.இராமச்சந்திரன்
திரு.ந.சிறீகாந்தன்
திரு.க.பாலசுப்பிரமணியம்
திரு.மா.பரமேஸ்வரன்
திரு.ப.அனுசன்
திரு.மா.சசிகரன்

Members:
Mr.P.Ramachandran.
Mr.N.Srikanthan.
Mr.K.Balasubramaniyam.
Mr.M.Parameswaran.
Mr.P.Anusan.
Mr.M.Sasikaran.

*வி. அரியரெட்ணம் அன் கம்பனி*
*பட்டயக் கணக்காளர்,*
*இல. 245, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*ஐயா,*

**கணக்காய்வு திருப்பணிச் சபை**
**2009 செப். - 2012 செப். வரையானது**

மேற்படி விடயம் தொடர்பாக, தங்களுடன் கலந்துரையாடியதற்கு அமைவாகக் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஆவணங்களும், பதிவேடுகளும், தயாரிக்கப்பட்ட பெறுவனவுகள், கொடுப்பனவு, கணக்கறிக்கை உரிய இணைப்புகளுடனும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

01. பற்றுச்சீட்டுக்களின் அடியிதழ் 2009 செப். - 2012 செப். வரை ப.சீ. 01-100, 101-200, 201-219 வரை

02. காசோலைப் புத்தகங்களின் அடியிதழ். 6 புத்தகங்கள் ப.சீ. 101 - 200, 201-219 வரை
    - அ) 710501 - 710550
    - ஆ) 040576 - 040625
    - இ) 065526 - 065575
    - ஈ) 076251 - 076300
    - உ) 088251 - 088300
    - ஊ) 094476 - 094525

03. தினக்குறிப்புப் பதிவேடு

04. காசேடும் துணைப் பேரேடும் (பெறுவனவு, கொடுப்பனவு பதிவேடு)

05. கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள்

    01ஆவது கோவை 2010 யூன் - 2010 டிசம்பர் VR. 01-45 வரை

    02ஆவது கோவை 2011 ஜன. -2011 டிசம்பர் VR. 01-112 வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
ஆனைக்கோட்டை - உயரப்புலம்

**ஸ்ரீ உத்துங்கவிநாயகர் ஆலய திருப்பணிச்சபை**

(இந்து சமய கலாச்சார அமைச்சில் பதிவு செய்யப்பட்டது இல. HA/5/CA/538)

**ANAICODDAI – UYARAPPULAM SRI UTHUNGAVINAYAGAR TEMPLE**

**THIRUPANI SABAI**

(Rgd in the Ministry of Hindu Religion and Cultural Affairs No. HA/5/CA/538)

*UYARAPPULAM*
*ANAICODDAI.*

உயரப்புலம்
ஆனைக்கோட்டை,

……/…./20……

தலைவர்:
திரு.இ.அருணகிரி

*President:*
Mr.R.Arunagiri

செயலாளர்:
திரு.அ.கணேசமூர்த்தி

*Secretary:*
Mr.R.A.Ganesamoorthy

பொருளாளர்:
திரு.க.ஜெயபாலன்

*Treasurer:*
Mr.K.Jeyabalan

அங்கத்தவர்கள்:
திரு.பொ.இராமச்சந்திரன்
திரு.ந.சிறீகாந்தன்
திரு.க.பாலசுப்பிரமணியம்
திரு.மா.பரமேஸ்வரன்
திரு.ப.அனுசன்
திரு.மா.சசிகரன்

*Members:*
Mr.P.Ramachandran.
Mr.N.Srikanthan.
Mr.K.Balasubramaniyam.
Mr.M.Parameswaran.
Mr.P.Anusan.
Mr.M.Sasikaran.


*03*ஆவது கோவை *2012* ஜன. - *2012* மார்ச் VR. *113-215* வரை
*04*ஆவது கோவை *2012* ஏப். - *2012* செப். VR.*216-365* வரை
(மொத்தமாக *410* கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள்)

**கோவைகள்**

*06.* வங்கி நடைமுறைக் கணக்கு இல. *0009749272* இன் வங்கிக் கணக்கறிக்கைக் கோவை இல. செப் - *2012.36*

*07.* வங்கி வைப்புச் சிட்டை

*08.* சித்திரத்தேர் உருவாக்கலுக்கான பகிரங்கக் கேள்வி அறிவித்தல் கோவை UU/VA/T/*2010* பக். *01-39*

*09.* இரதம் தரிப்பிட கட்டுமானக் கோவை இல. UU/VA/CRS பக். *01-67* வரை

*10.* மலைவேம்பு தறித்தலுக்கான அனுமதியும் சித்திரத்தேர் உருவாக்கலுக்குப் பயன்படுத்தலும் கோவை இல. UU/VA/MA/RC-*01-22* வரை

*11.* ஆலய உள் மண்டபப் புனரமைப்பு UU/VA/IH/RC *1-13*

*12.* கேள்விச் சபை கூட்டத் தீர்மான அறிக்கைப் பதிவேடு

*13.* திருப்பணிச்சபை கூட்டத் தீர்மான அறிக்கைப் பதிவேடு

*14.* வங்கி மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்

*15.* தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

மேற்படி ஆவணங்களையும் பதிவேடுகளைப் பாரமேற்ற திற்கான காரியாலய பற்றுச்சீட்டை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் நிதி வழங்கிய அடியார் களுக்கும் மகா சபைக்கும் கணக்கறிக்கை அச்சிட்டு விரைவாக வெளியிட வேண்டியுள்ளதினால் காலதாமதமின்றிக் கணக்காய்வு அறிக்கையை வழங்கி உதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள் கின்றோம்.

| செயலாளர் | பொருளாளர் | தலைவர் |
|---|---|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. ARIARATNAM & CO.
CHARTERED ACCOUNTANTS

**அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயம்**
**உயரப்புலம் - ஆனைக்கோட்டை**
**திருப்பணிச் சபை**
**01 புரட்டாதி 2009 தொடக்கம் 30 புரட்டாதி 2012 வரையுள்ள காலப்பகுதிக்குரிய**
**பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு**

| **பெறுவனவு** | **குறிப்பு** | | |
|---|---|---|---|
| நடைமுறைக் கணக்கு மீதி | | | 7000.00 |
| திருப்பணி நன்கொடை வரவு | 1 | 12,423,876.21 | |
| பொருட்கள் விற்பனை | 2 | 72550.00 | |
| சித்திரத்தேர் உருவாக்கலுக்கான ஆலய மலைவேம்பு | | 500,000.00 | |
| கயிலாசவாகனப் பாதுகாப்பு உறைக்கான நன்கொடை | | 5,000.00 | |
| வட்டி வரவு திருப்பணி வரவைத் தற்காலிக நிலையான வைப்பில் இட்டதினால் | | 288,097.43 | 13,289,523.64 |
| | | | 13,296,523.64 |
| **கொடுப்பனவுகள்** | | | |
| திருப்பணிக்கான பகிரங்கக் கேள்வி அறிவித்தல் | 3 | 5,295.60 | |
| சித்திரத்தேர் உருவாக்கலுக்கான தற்காலிகத் தேர் கொட்டகை அமைப்பும், அகற்றலும் | 4 | 244,109.00 | |
| கால்கோள் அபிஷேகப் பொருட்களும் தெட்ஷணையும் | 5 | 41,626.00 | |
| இரதம் தரிப்பிட நிர்மாணம் (கூறுவிலை கோரிக்கை ஒப்பந்தப் பிரகாரம்) | 6 | 3,106,636.78 | |
| இரதம் தரிப்பிட வைரவர் ஆலயம் | 7 | 67,160.00 | |
| சித்திரத்தேர் உருவாக்கலுக்கான கொடுப்பனவு | 8 | 5,200,000.00 | |
| தேர்ப் பாதுகாப்பும் ஏனையவையும் | 9 | 137,179.00 | |
| ஆலய வெளிவீதி கல்லிட்டுத் தாரிடல் | 10 | 1,419,489.00 | |
| ஆலய முன்மண்டப ஸ்ரீல் கிறில் அமைப்பு | 11 | 651,920.00 | |
| ஆலய உள்மண்டப வெளிப்புறம் தீந்தையிடல் | 12 | 209,531.00 | |
| ஆலயமண்டபம், பொங்கல் கொட்டகை, ஏனைய புனரமைப்பு | 13 | 413,547.45 | |
| ஆலய உள்ளக உபகரணங்கள் திருத்தம் | 14 | 68,150.00 | |
| ஆலய நடைமுறைச் சொத்துக்கள் கொள்வனவு | 15 | 105,730.00 | |
| வெள்ளோட்ட நிகழ்வும் யாத்திரா தானமும் | 16 | 191,774.00 | |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 17 | 9,410.00 | |
| நிர்வாகச் செலவுகள் | 18 | 44,902.56 | |
| வங்கிச் செலவுகள் | 19 | 9,279.65 | |
| அன்னதான சமையற்கூட நிர்மாணம் | 20 | 407,977.50 | |
| நிலையான வைப்பு தேர்ப் பராமரிப்பு ஏற்பாட்டிற்கு குறிப்பு | 21 | 500,000.00 | 12,833,717.54 |
| 31-09-2012 இல் உள்ளவாறு காசோட்டின் பிரகாரம் மீதி | | | 462,806.10 |
| | | | 462,806.10 |

| | | |
|---|---|---|
| ........................ | ........................ | ........................ |
| செயலாளர் | பொருளாளர் | தலைவர் |

01-09-2009 தொடக்கம் 30-09-2012 வரையான காலப் பகுதிக்குரிய பெறுவனவு, கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள், வங்கி ஆவணங்கள், காசேடு. பேரேடு ஆகியவற்றுடன் எம்மால் சரிபார்க்கப்பட்டது. எங்கள் அபிப்பிராயப்படி மேலே தரப்பட்டுள்ள பெறுவனவு, கொடுப்பனவுக் கணக்குப் பரிபாலன சபையின் நிதி நிலைமையைச் சரியாகப் பிரதிபலிக்கின்றது.

வே. அரியரெட்ணம் அன் கோ
பட்டயக் கணக்காளர்

14/11/2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. ARIARATNAM & CO.
CHARTERED ACCOUNTANTS

குறிப்பு 1 **திருப்பணி வரவு**

| ப. சீ. இல. | | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 001 | வே.இ.பொ. இராமச்சந்திரன் | கொக்குவில் மேற்கு | 1,001.00 |
| 002 | பராசக்தி வடிவேல் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 5,000.00 |
| 003 | து. தர்மரத்தினம் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 5,000.00 |
| 004 | மா. பரமேஸ்வரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 25,000.00 |
| 005 | ஜீவமோகன் குடும்பம் | (கனடா) கொக்குவில் மேற்கு | 100,000.00 |
| 006 | கனகசபாபதி செல்லையா குடும்பம் | கனடா | 11,000.00 |
| 007 | சுஜீவன் ரஜினி | கனடா | 10,000.00 |
| 008 | இ. அருணகிரி | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 25,000.00 |
| 009 | ந. மார்க்கண்டேயர் | கொக்குவில் மேற்கு | 30,000.00 |
| 010 | சிறிதரன் சிவச்செல்வி | உயரப்புலம், ஆனைக்கோட்டை (இத்தாலி) | 30,000.00 |
| 011 | பா. சிவகுமார் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (பிரான்ஸ்) | 25,000.00 |
| 012 | சீனிவாசம் ஜெகதீசன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 10,000.00 |
| 013 | இ. விஜயபாலன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 50,000.00 |
| 014 | வி. ஜெயகாந்தன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 50,000.00 |
| 015 | சுரேஸ்சன் விஜெயலதா | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 50,000.00 |
| 016 | ரமணன் சிவமலர் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 25,000.00 |
| 017 | பாலசுப்பிரமணியம் சிறிதரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 25,000.00 |
| 018 | ச. வீரசிங்கம் குடும்பம் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 20,000.00 |
| 019 | த. கனகலிங்கம் | மூர்த்தவிநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை | 40,000.00 |
| 020 | சு. இராசதுரை குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 50,000.00 |
| 021 | கிருஷ்ணதாசன் நிமலினி குடும்பம் | | 300,000.00 |
| 022 | ஐயாத்துரை கனகரத்தினம் | கொக்குவில் மேற்கு, கொக்குவில். | 3,000.00 |
| 023 | சி. சுந்தரலிங்கம் குடும்பத்தினர் | சுதுமலை தெற்கு | 100,000.00 |
| 024 | தி. சிவராமலிங்கம் | (அமெரிக்கா) | 5,000.00 |
| 025 | ந. யோகலிங்கம் | அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். | 50,100.00 |
| 026 | வி. பொன்னம்பலம் | அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 500,000.00 |
| 027 | ந. மார்க்கண்டேயர் | அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். | 70,000.00 |
| 028 | சந்திரசேகரம் உஷாந்தினி | இல.116/4, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை | 7,300.00 |
| 029 | மா. சிவஞானம் | கொக்குவில் மேற்கு, கொக்குவில். (கனடா) | 25,000.00 |
| 030 | கனகரத்தினம் விஜெயா | வராகி கோவில் வீதி, கொக்குவில் மேற்கு (சுவிஸ்) | 50,000.00 |
| 031 | திருமதி ப. மாணிக்கசிங்கம் | | 25,000.00 |
| 032 | தில்லையம்பலம் குடும்பம் | | 40,000.00 |
| 033 | சின்னத்துரை மகாதேவா | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 105,000.00 |
| 034 | வரதராஜா ஜெகதீஸ்வரி | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 035 | மு. துஷ்யந்தன் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 50,000.00 |
| | | | 1927401.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. ARIARATNAM & CO.
CHARTERED ACCOUNTANTS

| ப.சீ.இல. | | விபரம் | தொகை |
|---|---|---|---|
| | மீதி முன்பக்கம் கூட்டி வரவு | | 1927401.00 |
| 036 | திருமதி ஜெ. சிவானந்தனம் | கொழும்பு | 5,000.00 |
| 037 | திருமதி பராசக்தி சுப்பிரமணியம் | கனடா | 60,000.00 |
| 038 | அனுசியா பாலேந்திரன் | | 112,683.00 |
| 039 | சண்முககுலகுமார் | இணுவில் | 10,000.00 |
| 040 | முத்துராசா குடும்பம் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 25,000.00 |
| 041 | சத்தியவேள் சுலக்ஸன் (லண்டன்) | | 50,000.00 |
| 042 | விஜயகுமார் வசந்தமாலா (சுவிஸ்) | | 30,000.00 |
| 043 | செல்வி ரவிச்சந்திரன் ராகவி (நோர்வே) | | 25,000.00 |
| 044 | விமலேந்திரகுமார் மாலினி (சுவிஸ்) | | 10,000.00 |
| 045 | எஸ். சண்முகநாதன் | இல. 116/3, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை | 10,000.00 |
| 046 | நவரத்தினம் ஜெயந்திராணி | கொக்குவில் மேற்கு | 100,000.00 |
| 047 | அ. தங்கவேல் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 048 | செல்வன் யோகலிங்கம் பிரதீபன் | கொக்குவில் மேற்கு | 1,500.00 |
| 049 | அ. கணேசமூர்த்தி | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 100,000.00 |
| 050 | த. சிவநாதன் | உயரப்புலம், அரசடி, கொக்குவில் மேற்கு | 100,000.00 |
| 051 | த. சிவகுமார் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 25,000.00 |
| 052 | இராசரத்தினம் ராஜ்மோகன் | அரசடி, கொக்குவில் மேற்கு | 35,000.00 |
| 053 | நா. குணபாலசிங்கம் | அரசடி, கொக்குவில் மேற்கு | 100,000.00 |
| 054 | சிவமோகன் தமயந்தி | உயரப்புலம், ஆனைக்கோட்டை (அமெரிக்கா) | 230,000.00 |
| 055 | வை. பரமநாதன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 170,000.00 |
| 056 | க. பாலசுப்பிரமணியம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 057 | பாலசுப்பிரமணியம் ஆதவன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 44,345.00 |
| 058 | பாலசுப்பிரமணியம் இமயவன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 9,055.00 |
| 059 | தம்பிப்பிள்ளை ஜெயக்குமார் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (பிரான்ஸ்) | 100,000.00 |
| 060 | தர்மலிங்கம் சபாலிங்கம் | மாதர் சங்கம் லேன், சித்தன்கேணி | 25,000.00 |
| 061 | சூரியகுமார் நந்தினி | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 50,000.00 |
| 062 | ரமணன் சிவமலர் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 25,000.00 |
| 063 | ந. நவசேனா | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 50,000.00 |
| 064 | பாலசுப்பிரமணியம் சிவசொரூபன் | (சுவிஸ்) | 50,000.00 |
| 065 | ஜெயபாலன் துஷ்யந்தினி | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 5,000.00 |
| 066 | பொன்னுத்துரை மனோன்மணி குடும்பம் | கொக்குவில் மேற்கு | 11,200.00 |
| 067 | தஜீபன் | (கனடா) | 5,000.00 |
| 068 | சரஸ்வதி நாகராசா குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 518,467.21 |
| 069 | கந்தப்பிள்ளை குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 650,000.00 |
| | | | 46,89,651.21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ப.சீ.இல. | | விபரம் | தொகை |
|---|---|---|---|
| | மீதி முன்பக்கம் கூட்டி வரவு | | 46,89,651.21 |
| 070 | த. கனகலிங்கம் | மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை (அமெரிக்கா) | 60,000.00 |
| 071 | பரமேஸ்வரன் | (அமெரிக்கா) | 100,000.00 |
| 072 | வசந்தகௌரி புஸ்பலிங்கம் | சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் | 10,000.00 |
| 073 | செல்வயோகன் பாலினி | உயரப்புலம், ஆனைக்கோட்டை (அமெரிக்கா) | 162,041.00 |
| 074 | Dr. N. சிவனந்தன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (லண்டன்) | 42,000.00 |
| 075 | அ. தங்கராசா குடும்பம் | இணுவில் | 30,000.00 |
| 076 | சுப்பையா செல்வரத்தினம் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 5,000.00 |
| 077 | ஏ. துரைசிங்கம் ஞானகலை குடும்பம் | கொக்குவில் மேற்கு | 56,000.00 |
| 078 | இராமுப்பிள்ளை இராசரத்தினம் அன்னலட்சுமி குடும்பம் | | 25,000.00 |
| 079 | கதிரவேற்பிள்ளை மோகனதாஸ் | அரசடி, கொக்குவில் மேற்கு (பிரான்ஸ்) | 30,000.00 |
| 080 | கதிரவேற்பிள்ளை மோகனதாஸ் | அரசடி, கொக்குவில் மேற்கு(பிரான்ஸ்) | 20,000.00 |
| 081 | க. தர்மலிங்கம் | கந்தசாமி கோவிலடி, இணுவில் | 15,000.00 |
| 082 | க. தர்மராசா | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 100,000.00 |
| 083 | பாஸ்கரன் | பிள்ளையார் கோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை | 5,000.00 |
| 084 | Dr. விமலினி கணேசலிங்கம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 085 | கிருபாகரன் செந்தூரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 086 | ஏ. கணேசலிங்கம் | ஆனைக்கோட்டை | 50,000.00 |
| 087 | மாணிக்கம் சிவபாதத்துரை | கொக்குவில் மேற்கு | 100,000.00 |
| 088 | ந. தவராசா | வேலணை பிரதேச சபை | 500.00 |
| 089 | மா. பரமேஸ்வரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 25,000.00 |
| 090 | கிருபாகரன் செந்தூரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 5,000.00 |
| 091 | ம. வரதராஜன் | அரசடி, கொக்குவில் மேற்கு (ஜேர்மனி) | 25,000.00 |
| 092 | செல்லையா ரஞ்சன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (பிரான்ஸ்) | 30,000.00 |
| 093 | ஏகாம்பரம் துஜாந்தன் | வராகி அம்மன் கோவிலடி | 50,000.00 |
| 094 | காண்டீபன் ராகினி | (லண்டன்) | 2,000.00 |
| 095 | ஜெயவாணி விருபக்ஷன் | (லண்டன்) | 2,000.00 |
| 096 | S. சிறிதரன் | ஊரெழு மேற்கு | 1,000.00 |
| 097 | நா. தனபாலசிங்கம் | கொக்குவில் மேற்கு | 1,010.00 |
| 098 | மங்கையம்மா ஏகாம்பரம் | வராகி அம்மன் கோவில் வீதி, கொக்குவில் மேற்கு | 25,000.00 |
| 099 | நல்லையா ஞானசுந்தரம் | அரசடி, கொக்குவில் மேற்கு | 50,000.00 |
| 100 | சோ. கணேஸ்வரி | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 25,000.00 |
| | | | 57,61,202.21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ப.சீ.இல. | | விபரம் | தொகை |
|---|---|---|---|
| | மீதி முன்பக்கம் கூட்டி வரவு | | 57,61,202.21 |
| 101 | ஸ்ரீ குமரன் இரும்பகம் | ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | 350.00 |
| 102 | நாகராசா பரமேஸ்வரன் | உயரப்புலம், ஆனைகோட்டை (லண்டன்) | 150,000.00 |
| 103 | நாகராசா தங்கரத்தினம் குடும்பம் | யாழ்ப்பாணம் (லண்டன்) | 300,000.00 |
| 104 | த. சிவதாசன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 15,000.00 |
| 105 | ஸ்ரீகுமரன் இரும்பகம் | ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | 300.00 |
| 106 | குமாரசாமி குகதாசன் | அரசடி, கொக்குவில் மேற்கு (சுவிஸ்) | 100,000.00 |
| 107 | குகதாசன் நீரஜா | அரசடி, கொக்குவில் மேற்கு (சுவிஸ்) | 200,000.00 |
| 108 | குகதாசன் நிதர்சனா | அரசடி, கொக்குவி மேற்கு (சுவிஸ்) | 200,000.00 |
| 109 | சிவஸ்ரீ குகதாசக்குருக்கள் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 100,000.00 |
| 110 | நவரத்தினம் தவபாலன் | ஐயனார் கோவிலடி, கொக்குவில் | 200,000.00 |
| 111 | அ. குமாரசுவாமி | அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 3,000.00 |
| 112 | சண்முகம் சுதா | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 294,812.18 |
| 113 | மா. விக்கினேஸ்வரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 235,849.75 |
| 114 | சிவசுப்பிரமணியம் குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 117,924.87 |
| 115 | அ. தம்பிராசா | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 117,924.87 |
| 116 | ச. நித்தியானந்தன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 58,962.44 |
| 117 | சிறிக்குமார் ஆனந்தி | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 58,962.44 |
| 118 | பா. றாகவன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 23,584.98 |
| 119 | சி. நந்தன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 23,584.98 |
| 120 | துசிகரன் கோபிகா | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 11,792.49 |
| 121 | சிவசுப்பிரமணியம் குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 107,075.00 |
| 122 | பாலச்சந்திரன் குடும்பம் | வராகி கோவில் வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை | 200,000.00 |
| 123 | க. சிவநாதன் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 5,000.00 |
| 124 | பாலதேவன் சாந்தகுமார் | | 6,000.00 |
| 125 | மா. இராசலிங்கம் | கொக்குவில் மேற்கு (கனடா) | 10,000.00 |
| 126 | கலிங்கராசா ராஜேஸ்வரி | கொக்குவில் மேற்கு | 1,000.00 |
| 127 | சி. குமாரசாமி | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 40,000.00 |
| 128 | மா. சிவச்சந்திரன் | சிட்னி, அவுஸ்திரேலியா | 11,500.00 |
| 129 | வேலாயுதம்பிள்ளை ஜெயந்தி | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 130 | சி. செல்லையா குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 20,000.00 |
| 131 | ஞானசேகரம் ஜெயவதனி | மாவிட்டபுரம் | 2,000.00 |
| 132 | கிருபாகரன் செந்தூரன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 5,000.00 |
| 133 | முருகுப்பிள்ளை கந்தசாமி | மயிலிட்டி | 5,000.00 |
| 134 | செல்லத்துரை தவபாலச்சந்திரன் | தாவடி | 10,000.00 |
| | | | 84,05,826.21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ப.சீ.இல. | | விபரம் | தொகை |
|---|---|---|---|
| | மீதி முன்பக்கம் கூட்டி வரவு | | 84,05,826.21 |
| 135 | R.S. குமாரசாமி ஞாபகார்த்தமாக | | |
| | R.K. ஜெயக்குமார் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 100,100.00 |
| 136 | மகேந்திரன் திலீபன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 35,000.00 |
| 137 | க. கிறிஸ்ணகேசன் | கொக்குவில் மேற்கு, கொக்குவில் | 20,000.00 |
| 138 | ஞானசேகரம் ஜெயவதனி | மாவிட்டபுரம் | 1,000.00 |
| 139 | சோ. ரகுநாதன் குடும்பம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை | 50,000.00 |
| 140 | நா. பூபாலசிங்கம் | உயரப்புலம், ஆனைக்கோட்டை (கனடா) | 75,000.00 |
| 141 | ஆ. பரமேஸ்வரன் | அரசடி, கொக்குவில் மேற்கு (கனடா) | 50,000.00 |
| 142 | கிருஷ்ணராசா கம்ஸமதி | | 25,000.00 |
